விலை: 50.00
பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com






சங்கு 23
ஒலி 194 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 17 வெள்ளிக்கிழமை (01.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# அரசை பதவி விலகக் கோரி
# கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம்



*(கொழும்பு) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியினர் நேற்று வியாழக்கிழமை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.* *(15ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக 50% ஐ கடந்த பணவீக்கம்

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக பணவீக்கம் (Inflation) எனப்படும் பொருட்களின் விலை அதிகரிப்பு வேகம் 50 வீதத்தை கடந்துள்ளது.

இந்த மாதம் பணவீக்கம் 54.6% ஆக பதிவாகியுள்ளது.

இந்த மாதத்தில் உணவுப் பொருட்களின் விலைகள் 80 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 15

## ஜனாதிபதி பதவி விலகினால்தான்
# சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவும்
### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



*(கொழும்பு)*

ஜனாதிபதி உடனடியாக பதவி விலகினால்தான் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வரும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

*(15 ஆம் பக்கம் பார்க்க)*

## கொள்ளையர்களான ராஜபக்ஷக்களை வெளியேற்ற ஒன்றிணைக
### சஜித் அழைப்பு

(கொழும்பு)

கொள்ளையர்களான ராஜபக்ஷக்களை நாட்டிலிருந்து வெளியேற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இவர்களால் கொள்ளையடிக்கப்பட்ட தேசிய சொத்துக்களும் டொலர்களும் மீளப் பெறப்படும் 15

### எதிர்வரும் திங்கள் முதல்
## பலாலி விமான நிலைய சேவைகள் மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச பலாலி விமான நிலையம் தன் சேவைகளை இன்று மீள ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்ட போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் விமான சேவைகள் இடம்பெறும் என தெரியவருகின்றது.

இவ் விமான நிலையத்தின் ஊடாக தமிழ்நாட்டின் திருச்சி, சென்னை சர்வதேச விமான நிலையங்க 15

### கிளிநொச்சியில்
## குளத்திலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளத்திலிருந்து இளைஞன் ஒருவரின் சடலம் 15

## பொருளாதார பிரச்சினையை தீர்க்க தொடர்ந்து ஆதரவளிக்கப்படும்
### ஜனாதிபதியிடம் அமெரிக்க தூதுவர் உறுதி



(கொழும்பு)

பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினை சந்தித்து பேசியபோதே அவர் 15

### 22 வீதத்தால்
## பேருந்து கட்டணம் உயர்வு

(கொழும்பு)

நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் 15



அதிகமானோரால் சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட புகைப்படம்

## அராஜக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகும் வரை
### நாங்கள் ஓயவேமாட்டோம் - அநுரகுமார



(கொழும்பு)

"அராஜக ஆட்சி நடத்தும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும். அதுவரை நாம் ஓயப்போவதில்லை. எமது ஆட்டம் தொடரும்" இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. சூளுரைத் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகள் தேவை

87, சுவாதி, 38 பாவம், கனடா P.R 94,
சுவாதி, 8இல் செவ்வாய், 59 பாவம்,
அவுஸ்திரேலியா சிவில் எஞ்சினியர்
படித்த மணமகள் தேவை. (12031)

துர்க்கா திருமண சேவை
077 818 5978


எரிபொருள் நிரப்பு நிலையங்களில்

# முறைகேடுகளில் ஈடுபடும் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை

## பொலிஸ்மா அதிபர் அதிரடி உத்தரவு

(கொழும்பு)



பெற்றோல் நிலையங்களுக்கு அருகில் முறைகேடுகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரினால் பொலிஸ் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் கடமையில் இருக்கும் குறிப்பிட்ட சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் கடமையில் இல்லாத சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

சில பொலிஸ் அதிகாரிகள் மக்களிடம் பணம் பெற்றுக்கொண்டு எரிபொருளை இலகுவாக பெற்றுக் கொள்வதற்கு உதவி செய்வதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், எரிபொருளை சேகரித்து சிலர் அதனை அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும், அதனை விற்பனை செய்யும் குறிப்பிட்ட நபர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு உதவி செய்வதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் இருந்து பணத்தினை பெற்றுக்கொண்டு எளிதில் எரிபொருளை பெற்றுக் கொள்ள அனுமதிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் தனது சுற்றறிக்கையில் பணிப்புரை விடுத்துள்ளார். (ம-7)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பசுபதி



அம்பனை தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, ஆறுகால்மடத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பசுபதி அவர்கள் நேற்று (30.06.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையவி - பூதாத்தை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - சடையம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இருபாலை சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் மேனகா, காலஞ்சென்ற இரவீந்திரன் (ஆனைக்கோட்டை), மகேந்திரன் (சுவிஸ்), பாலேந்திரன் (கிளி), அமுதா (கனடா), காலஞ்சென்ற கருணாநிதி (பவா), சியாமளா (சுவிஸ்), ரேணுகா (லண்டன்), இரகுலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மகுலசிங்கம் (ஓய்வூதியர், மாகாண கணக்காய்வுத் திணைக்களம்), சத்தியானந்த தேவி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சாந்தி (சுவிஸ்), பவானி, ரவீந்திரன் (கனடா), பாலச்சந்திரன் (சுவிஸ்), ஜெயசுதன் (லண்டன்), கலாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, சின்னத்தம்பி, இலட்சுமி, அப்பையா, அன்னப்பிள்ளை மற்றும் சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் செரூஜனன் (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), ஐதுர்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), பர்மிலா (தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை), சுஜிந்தன் (ஆசிரியர்), பிருந்தா, சுகிர்தா, ரிஷானா (சுவிஸ்), லக்ஷன் (சுவிஸ்), மிதிலா (கனடா), அவேத் (கனடா), சரண்சிஸ் (சுவிஸ்), அலன்சிஸ் (சுவிஸ்), சுபானுகா (லண்டன்), ஆர்த்திகா (லண்டன்), லாவண்யா (பிரான்ஸ்), கிஷாளினி (பிரான்ஸ்), அஷ்வினி (பிரான்ஸ்), கம்ஷிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும் பிரதீபன் (சுற்றுச்சூழல் அலுவலகர்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மற்றும் சயூர்சிகா, சஷ்வந்த் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.07.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
மருமகன் - 077 219 3430

(12035)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 06 06 1946
உதிர்வு 01 06 2022

### அமரர் சபாநாயகம் இலட்சுமி

காலையில் கண்விழித்து மலர்ந்தாய் – அம்மா
மதியம் கண்மூடி மடிந்தாய் – அம்மா
மானிடர் வடிவில் காலன் வந்தானோ – அல்லது
எழுதி வைத்த விதியின் நியதியில் நீ சென்றாயோ
நாம் ஒன்றும் அறியோம் – அம்மா
பணத்தை கொடுத்தால் பாதகர் தப்பலாம்
படைத்தவன் தீர்ப்பால் எவரும் தப்ப முடியாது
ஆண்டவன் தன் தீர்ப்பை ஆராய்ந்து
ஆறுதலாய் வழங்கட்டும்
காலம் கதை சொல்லும் காத்திருப்போம் – எல்லோரும்
வந்தவரெல்லாம் போவது உண்மை அம்மா
எங்கள் குலவிளக்கு அணைக்கப்பட்டு
முப்பத்தொரு நாட்கள் ஆனதுவோ
உங்கள் திடீர் மரணத்தை தினம் தினம்
நினைத்து ஏங்கித் தவிக்கின்றோம் அம்மா
உங்களை எங்கள் உள்ளத்தில் வைத்து
நாள்தோறும் பூசிப்போம் அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-4562)

...ராடி, வதிரி, கரவெட்டி. குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு.மா.ராம்குமார் அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி மாணிக்கம் சரஸ்வதி

தோற்றம்:1933.03.22 | மறைவு: 2022.06.30

அவர்கள் 30.06.2022 அன்று
இறைபதம் அடைந்த செய்தி கேட்டு
துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால்
துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் ...
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர நிதியாக 1 பில்லியன் வழங்க சர்வதேச நாணய நிதியம் தயார்

## அரச ஊடகம் செய்தி வெளியீடு

(கொழும்பு)

**இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடன் கையிருப்பை வழங்க சர்வதேச நாணய நிதியம் தயாராகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

அரசாங்க உள்ளக தகவல்களை மேற்கோள் காட்டி அரச ஊடகம் ஒன்று வெளியிட்ட தகவலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கேற்ப இந்த இக்கட்டான சூழ்நிலையில் இலங்கைக்கு உதவ எதிர்பார்த்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடனாக அன்றி கையிருப்பாக அந்த நிதி வைப்புச் செய்யப்படவுள்ளதோடு இதன் மூலம் வெறுமையாக உள்ள இலங்கை கையிருப்பு ஒரு பில்லியன் டொலர்களாக உயர இருக்கிறது. இதனூடாக வேறு நாடுகளின் உதவிகளை பெற வாய்ப்பாக அமையுமென அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

# இலங்கை அரசு மீது நம்பிக்கை இழந்துள்ள சர்வதேசம்

## சு.க.சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தற்போதைய அரசின் மீது தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக நம்பகத்தன்மை இல்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் ரோஹன லக்ஸ்மன் பியதாச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் நிலவும் நெருக்கடி நிலையைத் தீர்த்துக்கொள்ள வெளிநாடுகளின் ஒத்துழைப்புக்களும் உதவிகளும் மிகவும் அவசியம். அதற்கு முன்னர் சர்வதேசத்திடம் நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்காக சர்வகட்சி அரசை நியமிக்க வேண்டும். இந்தச் செயற்பாடு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-6)

# இலங்கைக்கு உதவுவதாக உலக வங்கி உறுதி

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு ஏற்பட்டதன் பின்னர் உலக வங்கி மேல்திக உதவிகளை வழங்கும் என உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஃபாரிஸ் கடாட்-சர்வோஸ் தெரிவித்தார்.

உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையில் கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# இலங்கைக்கு எரிபொருள் வழங்குமாறு ரஷ்யாவிடம் மீண்டும் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு தேவையான எரிபொருளினை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ரஷ்ய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து இருவரும் விரைவில் தொலைபேசி ஊடாக கலந்துரையாடலில் ஈடுபடுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், இது குறித்து பேசும் நோக்கில் எதிர்வரும் சில நாட்களில் இலங்கை தூதுக்குழுவினர் ரஷ்யாவிற்கு பயணமாகவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கையில் நாளுக்கு நாள் எரிபொருள் தட்டுப்பாடு அதிகரித்து வரும் நிலையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சமையல் எரிவாயுவுக்கு வரிசை தேவையில்லை

## லிட்ரோ தலைவர் முதித்த பீரிஸ்

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதியளவில் நாட்டின் சமையல் எரிவாயு கொள்கலன்களுக்கான வரிசை குறைவடையக் கூடும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் மாத்திரம் 33 ஆயிரம் மெற்றிக் தொன் எரிவாயுயை நாட்டிற்கு இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் ஜூலை மாதம் 6, 10, 15, 22 மற்றும் 24 ஆகிய திகதிகளில் தலா 3,500 மெற்றிக் தொன் வீதம் ஐந்து எரிவாயு கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன.

அத்துடன் எதிர்வரும் 6 ஆம் திகதியின் பின்னர், ஒரு இலட்சத்து 20 ஆயிரம் சமையல் எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு விநியோகிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 4 மாத காலத்திற்கு ஒரு இலட்சம் தொன் எரிவாயுவினை கொள்வனவு செய்ய அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஐ.ஓ.சியிடம் இருந்து டீசல் கொள்வனவு

(கொழும்பு)

ஐ.ஓ.சி.நிறுவனத்திடம் இருந்து 7 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசலை கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கான பணப் பரிமாற்றமும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் குறித்த டீசல் இருப்புக்களை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# இறக்குமதி செய்யப்படும் பொருட்களை விநியோகிப்பதில் சிக்கல் நிலை

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பொருட்களை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை கொள்கலன் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், எ்ரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கான முறையான பொறிமுறை இல்லாததே இந்த பிரச்சினைக்கு பிரதான காரணம் என அகில இலங்கை கொள்கலன் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்துள்ளார். (நி-6)

# இரத்தக்களரியை ஏற்படுத்தாமல் வெளியேறுங்கள் கோட்டாபயவிடம் சம்பிக்க கோரிக்கை

(கொழும்பு)



நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடிக்குக் காரணமான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் இப்போதே வீட்டுக்குச் செல்ல வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்த மாதம் 25 ஆம் திகதி 1,000 மில்லியன் டொலர் இறையாண்மை பத்திரங்களில் செலுத்த வேண்டியுள்ளது என்றும், ஏற்கனவே 250 மில்லியன் டொலர் பெறுமதியான நிறுவனம் இலங்கைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால் இந்த வழக்கு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான ஆதரவில் நம்பிக்கை இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

எண்ணெய் மற்றும் எரிவாயு இறக்குமதியில் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் தலையிடுவதை நிறுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)

# நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட 46 இலங்கையர்கள் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தனர்.

அண்மையில், இலங்கையிலிருந்து சட்ட விரோதமாக படகுமூலம் பயணித்து அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்பட்ட குறித்த இலங்கையர்கள், அவுஸ்திரேலிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்

சிலாபத்தைச் சேர்ந்த குறித்த நபர்கள், கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷேன் வார்னே சாதனையை சமன் செய்த நாதன் லயன்

இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா அணி விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது. டாஸ் வென்ற இலங்கை அணி பட்டிங்கை தேர்வு செய்து விளையாடியது.

லாதன் லயனின் சிறப்பான பந்து வீச்சால் இலங்கை அணி 212 ரன்னில் ஓல் அவுட் ஆனது.

இந்த போட்டியில் நாதன் லயன் 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதன் மூலம் அவுஸ்திரேலியா அணியின் ஜாம்பவான் வார்னே சாதனையை லயன் சமன் செய்துள்ளார்.

நாதன் லயன் 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் காலே மைதானத்தில் இலங்கை அணிக்கு எதிராக 90 ரன்கள் விட்டு கொடுத்து 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். தற்போது இலங்கைக்கு எதிராக அதே மைதானத்தில் 5 விக்கெட்டுகளை லாதன் லயன் எடுத்துள்ளார். ஆசியா கண்டத்தில் நாதன் லயன் 9 முறை ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.



இதில் இந்தியாவுக்கு எதிராக மூன்று முறையும், பங்களாதேஷ் அணிக்கு எதிராக 3 முறையும் இலங்கை அணிக்கு எதிராக 2 முறையும் பாகிஸ்தானுக்கு எதிராக ஒரு முறையும் 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதன் மூலம் ஆசியாவில் அதிக முறை 5 விக்கெட்டுகள் வீழ்த்திய மறைந்த அவுஸ்திரேலியா ஜாம்பவான் வார்னே சாதனையை சமன் செய்துள்ளார்.

அனைத்து டெஸ்ட் போட்டிகளில் சேர்த்து லாதன் லயன் 20 முறை 5 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

இதன் மூலம் ஆலன் டொனால்ட்(தென் ஆபிரிக்கா) மற்றும் டேனியல் விக்டோரி (நியூசிலாந்து) சாதனையை சமன் செய்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக முறை 5 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்தியவர்கள் பட்டியலில் இலங்கை அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் முதல் இடத்தில் உள்ளார். அவர் 67 முறை 5 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 0

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் கப்டனாக பும்ரா நியமனம்



கொரோனா அச்சுறுத்தலால் கடந்த ஆண்டு தள்ளி வைக்கப்பட்ட இந்தியா- இங்கிலாந்து அணிகள் இடையிலான 5 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதையொட்டி அங்கு பயிற்சி ஆட்டத்தில் விளையாடிய போது இந்திய அணியின் கப்டன் ரோகித் சர்மாவுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டது. இதையடுத்து அவர் ஹோட்டல் அறையிலேயே தனிமைப்படுத்தப்பட்டார்.

இந்த நிலையில் ரோகித் சர்மாவுக்கு மீண்டும் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் கொரோனா தாக்கம் இன்னும் குறையவில்லை என்பது கண்டறியப்பட்டது.

இதனால் தொடர்ந்து தனிமையில் உள்ள அவருக்கு இன்று மேலும் இரு முறை சோதனை நடத்தப்படவுள்ளது. தற்போதைய சூழலில் அவர் முக்கியமான இந்த டெஸ்டில் விளையாட வாய்ப்பில்லை என்பது தெரியவந்துள்ளது.

துணை கப்டன் லோகேஷ் ராகுல் காயத்தால் ஏற்கனவே விலகி விட்டார். எனவே ரோகித் சர்மாவுக்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா இந்திய அணியின் கப்டனாக பணியாற்றுவார் என்று கிரிக்கெட் வாரிய மூத்த நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.


28 வயதான பும்ரா இதற்கு முன்பு எந்த அணிக்கும் கப்டனாக இருந்ததில்லை. மேலும் 1987 ஆம் ஆண்டு கபில்தேவுக்கு பிறகு இந்திய டெஸ்ட் அணியை வழிநடத்தும் வேகப்பந்து வீச்சாளர் என்ற சிறப்பையும் அவர் பெற உள்ளார். (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2652

### சம்மிகா

பிரச்சனை என்பது தொலைநோக்கி
போலவே நீ பார்க்கும் பார்வையில்
தான் எல்லாம் அடங்கி இருக்கிறது
அதை பெரிதாக நினைத்தால்
பெரிதாகத்தான் தோன்றும்
சிறியதாக நினைத்தால்
பிரச்சனை உனக்கு ஒரு
பொருட்டாகவே தெரியாது

### சங்கீத்



மேலே ஏறும் போது சந்திப்பவர்களிடம்
இனிமையாகப் பேசி விட்டு ஏறுங்கள்.
ஏனெனில் கீழே இறங்கும் போது
அவர்களை சந்தித்தே ஆக வேண்டும்.

### இன்னிலா

யாருக்கும் அதிகமாக உதவி செய்யாதே
உனக்குள்ள மரியாதையை
இழந்து விடுவாய்!



### துஷித்திரன்

குத்தும் ஊசியிடம் எல்லாம் வாதாடிக்
கொண்டிருந்தால் ஆடை தன்
அழகை இழந்து விடும்.
வெட்டும் கத்தரிக்கோலிடம்
எல்லாம் வாதாடினால்
ஆடை தன் வடிவமைப்பை இழந்து விடும்..
சில காயங்கள் நம்மை நேர்த்தி செய்யும்
எனத் தெரிந்தால் மகிழ்ச்சியாய் ஏற்றுக்
கொள்ள வேண்டியது தான்...
ஆடை போல!!!

### கனிஷ்கா

உழைத்து வாழ்பவர்களை விட
வாழாமல் உழைப்பவர்களே
இங்கு அதிகம்



### வைஷ்ணவ்

சோகத்தின் பக்கத்தில் சொர்க்கம்
இருப்பதையும்...
சுகத்தின் பக்கத்தில்
துக்கம் இருப்பதையும்
நீ அறிந்து கொள்
சில சோகங்களை நேசிக்கப் பழகு
சில சோகங்களை மறக்க பழகு
வாழ்க்கை யதார்த்தமானது..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் இலங்கையர்கள் நாட்டை மீட்பார்கள்

## மனுஷ நாணயக்கார நம்பிக்கை

(கொழும்பு).

நாட்டுக்கு டொலர் பெற்றுக் கொள்ள இருக்கும் இலகுவான வழி வெளிநாட்டு தொழிலாளர்களிடமிருந்து கிடைக்கும் வருமானமாகும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

எமதுநாடு கடன் செலுத்த முடியாத நாடு என முழு உலகுக்கும் பிரபல்யமாகி இருக்கின்றது. அப்படியானால் எமக்கு



யாரும் கடன் வழங்க மாட்டார்கள்.

அதனால் கடன் சுமை அதிகரித்தது. நாட்டில் கையிருப்பில் இருந்த அந்நிய செலாவணி குறைந்தது. அதிகூடிய வட்டிக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை செலுத்த முடியாமல் போயிருக்கின்றது.


உலகில் அதிகமான நாடுகள் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடையும் போது, அந்த நாடுகளில் வெளிநாடுகளில் தொழில் புரிபவர்கள் உதவி செய்துள்ளார்கள்.

அதேபோன்று எமது நாடும் தற்போது பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருக்கின்ற நிலையில், வெளிநாடுகளில் தொழில் செய்து வரும் இலங்கையர்களும் நாட்டுக்கு பணம் அனுப்பி நாட்டை கட்டியெழுப்புவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

தற்போது நாட்டுக்கு டொலர் கொண்டுவருவதற்கு இருக்கும் இலகுவான வழி வெளிநாடுகளில் தொழில் புரிபவர்களின் வருமானமாகும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# வவுனியாவில் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம் பெற்ற இப்போராட்டத்தில் சர்வதேசமே எமக்கான நீதியை பெற்றுத்தா என்ற தொனிப் பொருளில் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இதேவேளை காணாமல் போனோரின் அலுவலகத்தினால் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்திற்கும் ஆட்சேபனை தெரிவித்திருந்த போராட்டக்காரர்கள் ஐ.நா.விற்கு கண்துடைப்புக்காக இவ்வாறு கடிதங்கள் அனுப்பப்படுவதாகவும் குற்றம் சாட்டியிருந்தனர். (4-6-299)

# 4-6 ஆம் திகதி வரை பாராளுமன்ற அமர்வுகள்

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகள் இம்மாதம் 4,5 மற்றும் 6 ஆம் திகதிகளில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பு நேற்று வெளியாகியுள்ளது. (நி-6)



# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
**திருமதி.கேமமாலினி கணேசலிங்கம்**
அவர்களின் அன்பு மாமியாரும் எமது
பாடசாலை முன்னாள் ஆசிரியர்
**திரு.இ.இராசலிங்கம்** அவர்களின்
அன்புத் தாயாரும் ஆகிய
**திருமதி.**
**இராமலிங்கம் நல்லம்மா**
அவர்கள் காலமானதையிட்டு துயர்
உற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



பாடசாலைச் சமூகம்
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

(2022)

# பாதுகாப்பிற்காக துப்பாக்கிகளை கோரும் பாராளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

இதுவரை தம்வசம் துப்பாக்கிகளை வைத்திருக்காத புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது தற்பாதுகாப்புக்காக துப்பாக்கிகளை கோரியுள்ளனர்.

இதனடிப்படையில், 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் கைத் துப்பாக்கிகளை பெற்றுக்கொள்ள புதிதாக விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பிரச்சினைகள் மற்றும் கஷ்டங்கள் காரணமாக மக்கள் மத்தியில் அரசியல்வாதிகள் மீது கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இதனால், மக்களின் எதிர்ப்புக்கு உள்ளாகலாம் என அரசியல்வாதிகள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

# இராசிபலன்

01.07.2022
ஆனி 17, வெள்ளிக்கிழமை
துதியை பிற்பகல் 12.15 மணிவரை

பூசம் பின்னிரவு 3.19 மணிவரை
சுபநேரம் 5.56-7.26 மணிவரை
இராகுகாலம் 10.26-11.56 மணிவரை

சந்திராஷ்டமம்
மூலம்

**வளவன்**




கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெற்றோர் ஆதரவால் பெருமைகள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், பயணங்களால் சுப விரயங்கள் ஏற்படலாம்.




குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.




வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நினைத்த காரியம் நிறைவேறும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, போசன சுகமுண்டு.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுறு சுறுப்போடு செயற்படுவீர்கள், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும்.




ஆரோக்கியம் சீராகி ஆனந்தம் கூடும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.




நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.




செல்வ நிலை உயரும் நாள், தொழிலில் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விரதங்களில் நம்பிக்கை கூடும், பொது வாழ்வில் கௌரவம் கூடும் நாள்.




எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம்.




தொழில் வளர்ச்சி ஏற்படும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

எடுப்பதைக் கொடுக்கும் வானம் போல இனிதே வாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி வங்கி ஊழியர்கள் நேற்று போராட்டம்



(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி வங்கி ஊழியர்கள் பெற்றோல் வழங்குமாறு கோரி நேற்று போராட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை ஆகிய சமுர்த்தி வங்கிகளின் ஊழியர்களே பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு முன்பாக, தமக்கு பெற்றோல் வழங்குமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டனர். அத்துடன் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளித்தனர். (4-6-60)

# திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும் இந்திய அரசு புனரமைக்க வேண்டும்

## கலாநிதி. ஆறு.திருமுருகன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீச்சர ஆலய புனரமைப்புப் பணி போல் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும் இந்திய அரசு பொறுப்பெடுத்து திருப்பணிகளை நிறைவேற்றி காக்க வேண்டும் என செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆலய புனரமைப்பு பணி தொடர்பாக இந்திய பிரதமர் மோடிக்கு அனுப்பிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கை வாழ் சைவ மக்களின் பெருங்கோவில்களுள் ஒன்றாக விளங்குகின்ற திருக்கேதீச்சரத்தை இந்திய அரசாங்கம் சுமார் முந்நூற்று ஐம்பது மில்லியன் ரூபாய் செலவில் கருங்கற் கோவிலாக அமைத்துச் சிறப்பித்துள்ளமை நன்றிக்குரிய விடயமாகும்.

திருக்கேதீச்சரத்தை புனரமைத்தது போல் சரித்திரப் பெருமை கொண்ட திருகோணமலை திருக்கோணேஸ்வரத்தையும் இந்திய அரசு பொறுப்பெடுத்து நன்முறையில் ஆலயத் திருப்பணிகளை நிறைவேற்றித் தர வேண்டும்.

திருக்கோணேஸ்வர ஆலயத்தில் திருப்பணி வேலைகளைச் செய்வதில் இலங்கைத் தொல்லியல் திணைக்களம் திட்டமிட்டு தடுத்து வருவதை பலரும் அறிவர். திருக்கோணேஸ்வர ஆலய கோபுரத் திருப்பணி, அன்னதான மண்டபத் திருப்பணி, தேரோடும் வீதி அமைப்பு யாவும் பல வருடங்களாக தடைப்பட்டு போயுள்ளது.

இந்நாட்டின் மீது, படையெடுத்த போர்த்துக்கேயரால் 1510 இல் கோணேஸ்வரர் கோயில் முற்றாக அழிக்கப்பட்டது.

இன்று வரை அவ்ஆலயம் முழுமையாக கட்டி முடிக்கவில்லை.

இந்திய நாட்டுடன் மிக நெருங்கிய வரலாறு கொண்டது. திருகோணமலை இராமாயண காலத்து திருக்கோயில் என்பது யாவரும் அறிந்ததே. இந்தியப் பிரதமர் திருக்கோணேஸ்வர ஆலய திருப்பணியில் அக்கறை கொண்டு ஆலயத்தினை புனர்நிர்மாணம் செய்து உதவுமாறு தெரிவித்தார். (4-6)

# செவ்வாய், வியாழக்கிழமைகளில் கொன்சியூலர் சேவைகள் இடம்பெறாது

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்கான கொன்சியூலர் சேவைகள் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் மாத்திரமே நடைபெறும். செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய தினங்களில் நடைபெற மாட்டாது என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

அது தொடர்பில் அமைச்சின் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவு,எதிர்வரும் ஜூலை 10 வரை திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே பொதுமக்களுக்கு சேவைகளை வழங்கும்.

யாழ்ப்பாணம், மாத்தறை, கண்டி, திருகோணமலை மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் உள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களுக்கும் இது பொருந்தும் என்பதுடன், அந்த அலுவலகங்களும் இந்த நாட்களிலேயே சேவைகளை வழங்கும். அவசர விசாரணைகளுக்காக கொன்சியூலர் விவகாரப் பிரிவு - கொழும்பு - consular@mfa.gov.lk, பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் - யாழ்ப்பாணம் - jaffna.consu lar@mfa.gov.lk பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் - மாத்தறை - matara.consular@mfa.gov.lk, பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் - கண்டி - kandy.consular@mfa.gov.lk, பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் - திருகோணமலை - trincomalee.consular@mfa.gov.lk, பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் - குருநாகல் - kurunegala.consular@mfa.gov.lk, ஆகிய மின்னஞ்சல்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-6-33)



இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்கு விஜயம் செய்தார். (படம் - ரவிசாந்)

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள அரியாலை பொது சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி இன்று காலை 8.30- அரியாலை சனசமூக நிலையம் புங்கன்குளம் வீதி, முற்பகல் 10.15 - பென்ரிகேஸ் லேன், பிற்பகல் 12.15 - தியாகராசா படிப்பகம் கண்டி வீதி அரியாலை ,04 ஆம் திகதி காலை 8.30- சரஸ்வதி சனசமூக நிலையம் கண்டி வீதி அரியாலை, முற்பகல் 10.15- மிருக மருத்துவ நிலையம் A.V. ROAD அரியாலை, பிற்பகல் 12.15 - பிரப்பங்குளம் அம்மன் கோவிலடி இலந்தைக்குளம் வீதி, 5 ஆம் திகதி காலை 8.30- கலைமகள் சனசமூக நிலையம் அரியாலை, முற்பகல் 10.15- காந்தி சனசமூக நிலையம் அரியாலை, பிற்பகல் 12.15 - அருணோதயா சனசமூக நிலையம் அரியாலை, 6 ஆம் திகதி காலை 8.30- திருமகள் சனசமூக நிலையம் அரியாலை, முற்பகல் 10.15- மலர்மகள் சனசமூக நிலையம்அரியாலை, பிற்பகல் 12.15 - பாரதி சனசமூக நிலையம் நாயன்மார்கட்டு செம்மனி வீதி,7 ஆம் திகதி காலை 8.30- அம்பாள் சனசமூக பேச்சி அம்மன் கோவிலடி, முற்பகல் 10.15- மகேஸ்வரி பாடசாலை அருகில் நாயன்மார்கட்டு, பிற்பகல் 12.15- கலைவாணி சனசமூக நிலையம் பொன்னம்பலம் வீதி, 8 ஆம் திகதி காலை 8.30 முள்ளி வீதி அரியாலை, முற்பகல் 10.15 ஆள்காட்டி வீதி அருளம்பலம் வீதி சந்தி, பிற் பகல் 12.15 இராஜேஸ்வரி வீதி அரியாலை ,11 ஆம் திகதி காலை 8.30 கனகரட்னம் வீதி நாவலர் வீதிச் சந்தி அரியாலை, முற்பகல் 10.15 கனகரட்னம் மகா வித்தியாலயம் அருகில் நாவலர் வீதி, பிற்பகல் 12.15-பாரதி வீதி முதலியார் வீதிச்சந்தி அரியாலை, 12 ஆம் திகதி காலை 8.30 - கச்சேரி நல்லூர் வீதி றக்கா வீதிச் சந்தி அரியாலை, முற்பகல் 10.15 - பேரின்நாயகம் வீதி அரியாலை, பிற்பகல் 12.15 - கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச் சந்தி, 14 ஆம் திகதி காலை 8.30 - சாஸ்திரியர் வீதி அரியாலை, முற்பகல் 10.15 அருளம்பலம் வீதி (சந்தன மாதா ஒழுங்கை), பிற்பகல் 12.15 -கச்சேரி கிழக்கு புகையிரதப் பாதை (ஒழுங்கை) ஆகிய இடங்களில் வைத்து ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் ஒரு நாய்க்கான உரிமைக் கட்டணமாக 50 ரூபாய் அறவிடப்படும் எனவும் யாழ். மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (4-6)

# யாழ். கோட்டை முனீஸ்வரன் அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ் பெருவிழா நேற்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 28 தினங்கள் இவ்வாலய அலங்கார உற்சவம் இடம்பெற உள்ளதுடன் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்குச் சப்பரத் திருவிழாவும், 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 1008 சங்காபிஷேகமும் மாலை 5.30 மணிக்கு இரத பவனியும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (4-6-18)

# மணல் அகழ்வு ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மறவன் புலோ பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவியந்திரம் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மணல் அகழ்வில் ஈ பட்ட உழவியந்திரத்து சந்தேக நபர் ஒருவ பொலிஸாரால் கைது செ யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு இலட்சம் மெற்றிக்தொன் எரிவாயு ஒப்பந்தத்தில் லிட்ரோ கைச்சாத்து

(கொழும்பு)

100.000 மெற்றிக்தொன் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தில் லிட்ரோ எரிவாயு நிறுவனம் நேற்று கைச்சாத்திட்டுள்ளது. உலக வங்கியுடனான குறித்த ஒப்பந்தத்தில், லிட்ரோ நிறுவனம் சார்பில் அதன் தலைவர் முதித்த பீரிஸ் கைச்சாத்திட்டுள்ளார்.

இவ்வாறு பெறப்படவுள்ள 100.000 மெற்றிக் தொன் எரிவாயுவின் பெறுமதி 90 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும், அதற்கு உலக வங்கி 70 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதுடன் மீதமுள்ள 20 மில்லியன் அமெரிக்க டொலர் லிட்ரோ நிறுவனத்தால் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த எரிவாயு கையிருப்பு சுமார் நான்கு மாத காலத்திற்கு நாட்டின் பாவனைக்கு போதுமானது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எரிவாயு கையிருப்பில் 70% வீட்டுப் பாவனை நுகர்வுக்காக வழங்கப்படும் அத்துடன் எஞ்சிய 30% எரிவாயு கையிருப்பு வணிக பயன்பாட்டிற்காக வழங்கப்படவுள்ளது. (நி-6)

PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **31.12.2020 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள்- 23.07.2022 (சனிக்கிழமை) ஆகிய திகதியில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில்** வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ்.ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பழை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ்.பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ். கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்.

**நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி : 22.07.2022**
**ஏல விற்பனை நடைபெறும் இடம் : யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை**
**திகதி : 23.07.2022 (சனிக்கிழமை)**

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
**பிராந்திய தலைமையகம்,**
**இல: 82, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.** (நி-4549)

தொ.பே.இல : 021 222 2601
021 222 8602
தொலை நகல் : 021 222 2602
ஈ-மெயில் : jafrho@peoplesbank.lk

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு; 1989 இந்து<br>நட்சத்திரம்:அனுசம் 1<br>கி.பா: 33 சூரி 6 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: BAசிறப்புக்கலைமாணி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>உயரம்:5'8"<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் ஆசிரியர் விரும்பத்தக்கது உள்நாடுமட்டும்<br>தொ.இ: B/12793 | பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா: 53 சூரி 8 செவ் 12 இல்<br>உயரம்:5'1"<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரியும் அதற்கு மேல் உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/10410 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்:6'2"<br>தகைமை/தொழில்: T.O NCT Civil<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12794 | பிறப்பு:1982 இந்து நட்சத்திரம்:சுவாதி 3<br>கி.பா:14 ¾ சூரி 11 செவ் 2 இல்<br>உயரம்:5'1"<br>தகைமை/ தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரசதொழில்<br>தொ.இ: G/10417 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம் 4<br>கி.பா:25½ சூரி 11 செவ் 8 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L சொந்ததொழில் (லண்டன்)<br>எதிர்பார்ப்பு : படித்த உள்நாட்டு பெண்<br>தொ.இ: B/12795 | பிறப்பு: 1989இந்து நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா:33 சூரி.செவ் 4 இல்<br>உயரம்:167 cm<br>தகைமை/தொழில்:BSc,MSc பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச. தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/10426 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா:38 சூரி 10 செவ் 12 இல்<br>தகைமை/ தொழில்: A/L கணிதப் பிரிவு வேலை விசா மூலம் வெளிநாடு செல்லவுள்ளார்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் -<br>தொ.இ: B/12796 | பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா:31 சூரி 11 செவ் 12 இல்<br>உயரம் :5'6"<br>தகைமை/ தொழில்: A/L அழகுக்கலை<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/10429 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

# சேவை நலன் பாராட்டு




## திருமதி. மோகனரஞ்சி சண்முகானந்தன் SLTS-I

**B.Com, POST GRADUATE DIPLOMA IN EDUCATION**

எமது கல்லூரியில் 2014.02.06 தொடக்கம் ஆசிரியராக இணைந்து கொண்ட திருமதி மோகனரஞ்சி சண்முகானந்தன் அவர்கள் வர்த்தக பாடத்தை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தமது தெளிவான வழிகாட்டுதல்களின் மூலம் கற்பித்து வந்துள்ளார்.

மிக மென்மையான சுபாவம் கொண்ட அவர் யாரையும் கடிந்து கொண்டதை நாம் காணவில்லை. மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் மிகப் பண்பாக மென்மையாக மற்றவர் மனம் கோணாதபடி நடந்து கொள்வார். இப்படியும் ஒருவர் மிகச் சாதுவாக இருக்க முடியுமா என எம்மையும் மாணவர்களையும் சிந்திக்க வைத்த ஒருவர்.

கொடுத்த கடமைகளை மிகத் திறமையாக செய்து முடிக்கும் ஒருவர். வர்த்தக பாட ஆசிரியராக இருப்பினும் இடை நிலை வகுப்பு மாணவர்களின் தொழில் முன்னிலைப்பாடத்தின் இணைப்பாளராக இருந்து தன்மையான பங்களிப்பைச் செய்தவர்.

அத்தோடு பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வுகளைச் சீராகப் பேணுவதிலும் சிறப்பாகச் செயற்பட்டவர். மேலும் கடந்த 5 வருடங்களாக உயர்தர வகுப்புக்களின் வணிகப் பிரிவில் பகுதித் தலைவராகவும் செயற்பட்டு இன்று ஓய்வு பெறுகின்றார். இவரது ஓய்வுக் காலம் மகிழ்வானதாகவும் சிறப்பானதாகவும் அமைய சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை வேண்டுகின்றோம்.

சேவை விபரம்
**யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி**
**11.01.1993-23.03.1993**
**யா/அருணோதயக் கல்லூரி**
**24.03.1993-19.01.2014**
**யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்**
**20.01.2014-05.02.2014**
**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**
**06.02.2014-01.07.2022**

**பாடசாலை சமூகம்**
**யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.**

(நி-4555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 85

## பாராட்டுக்காக வேலை செய்யாதே



ஒரு பணக்காரர் தன் வீட்டில் கடவுள் சிலை வைக்க , ஒரு சிற்பியை அணுகி சென்றார் . அவர் சென்ற நேரம் அந்த சிற்பி ஒரு பெண் கடவுள் சிலையை செதுக்கிக் கொண்டிருந்தார். கொஞ்ச நேரம் அவர் செதுக்குவதை வேடிக்கை பார்த்த அவர்.

சிற்பி செதுக்கிய இரண்டு சிலைகளும் ஒரே மாதிரி இருப்பதை கவனித்த பணக்காரர் "ஒரே கோவிலில் எப்படி ஒரே மாதிரி சிலைகள் வைப்பார்கள் ? " இல்லை இந்த இரண்டு சிலைகளும் வெவ்வேறு கோவிலுக்காக செதுக்குகிறீர்களா?" என்று சிற்பியிடம் கேட்டார்

சிற்பி சிரித்துக்கொண்டே "இல்லை ஐயா கீழே கிடக்கும் சிலையானது உடைந்து போனது" என்றார்

பணக்காரர் ஆச்சரியத்துடன் "என்ன சொல்றீங்க மிகவும் அழகாக தானே இருக்கிறது அந்த சிலையில் எந்த பாகமும் உடையக்கூட இல்லையே " எனக்கேட்டார்

"அந்த சிலையின் மூக்கில் சின்ன கீறல் இருக்கிறது பாருங்கள்" என்றார் சிற்பி

"ஆமாம் அது சரி ..இந்த சிலையை எங்கே வைக்கப் போகிறீர்கள் ? " என்று கேட்டார் பணக்காரர்.

"இது கோவில் கோபுரத்தில் நாற்பது அடி உயரத்தில் வரும் சிலை "என உளியை உயர்த்திக் காட்டி சொன்னார் சிற்பி

பணக்காரர் வியப்புடன் "நாற்பது அடி உயரத்தில் இந்த சின்ன கீறலை யார் கண்டுபிடிக்கப் போகிறார்கள்? இதற்காக ஏன் இன்னொரு சிலை செய்கிறாய் முட்டாள் " எனக் கேட்க

"அந்த சிலையில் கீறல் இருப்பது எனக்கு தெரியுமே ..எப்போது அந்த கோவில் வழியாகச் சென்றாலும் எனக்கு என் தொழிலில் உள்ள குறை உறுத்துமே ..அதனால் தான் இன்னொரு சிலை செய்கிறேன் " என்றார் சிற்பி

நீதி : "அடுத்தவர் பாராட்டுக்காக எந்த வேலையும் செய்யாதே உன் மனத்திருப்திக்காக வேலை செய்.

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## பேருந்து தீப்பற்றி எரிந்ததில் 5 பேர் பலி, 9 பேர் காயம்

## நைஜீரியாவில் துயரம்

(நைஜர்)

நைஜீரியாவின் தென் மேற்கு பிராந்தியத்தில் மூன்று மாநிலங்களை இணைக்கும் லாகோஸ்-இபாடான் நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் புதன் கிழமை பேருந்து ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்ததில் பேருந்துக்குள் இருந்த 5 பேர் தீயில் கருகி பலியாகினர். மேலும் ஒன்பது பேர் காயமடைந்தனர். (நி-6)

### உக்ரைனுக்கு

## ஒரு பில்லியன் பவுண்டுகள் இராணுவ உதவி

### பிரித்தானியா அறிவிப்பு

(லண்டன்)

உக்ரைனுக்கு கூடுதலாக ஒரு பில்லியன் பவுண்டுகள் இராணுவ உதவியை வழங்குவதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

இது ரஷ்யப் படையெடுப்பிற்கு எதிரான போராட்டத்திற்கான அதன் ஆதரவை இரட்டிப்பாக்குகிறது. அத்துடன் புதிய புதிய நிதியுதவி உக்ரைனுக்கு வழங்கப்பட்ட இராணுவ உதவியை 2.3 பில்லியன் பவுண்டுகளாக உயர்த்துகின்றது.

மேலும், பிரித்தானியா மனிதாபிமான மற்றும் பொருளாதார ஆதரவிற்காக 1.5 பில்லியன் பவுண்டுகளை உக்ரைனுக்கு செலவிட்டுள்ளது.

புதிய பிரித்தானிய உதவியானது, அதிநவீன வான் பாதுகாப்பு அமைப்புகள், ஆளில்லா விமானங்கள், எலக்ட்ரானிக் போர் உபகரணங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான முக்கிய கிட்களுக்கு பணம் செலுத்துவதை நோக்கி செல்லும் என்று பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

உக்ரைனின் போர் முயற்சிகளுக்கு மேலும் உதவுமாறு நேட்டோ தலைவர்களை ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி வலியுறுத்தியதை அடுத்து இந்த உறுதிமொழி எடுக்கப்பட்டது.உக்ரைனுக்கான மாதாந்திர பாதுகாப்புச் செலவு சுமார் 5 பில்லியன் டொலர்கள் என ஜெலன்ஸ்கி நேட்டோ தலைவர்களிடம் தெரிவித்தார்.

உக்ரைனுக்கான இராணுவ உதவியின் அடிப்படையில் பிரித்தானியா, அமெரிக்காவிற்கு அடுத்த படியாக இரண்டாவது இடத்தில் உள்ளது. அமெரிக்கா சமீபத்தில் 40 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆதரவுப் பொதிக்கு ஒப்புதல் அளித்தது. (நி-6)

## G20 மாநாட்டில் உக்ரைன் ஜனாதிபதி

(டில்லி)

எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் பிராந்தியத்தில் நடைபெறவுள்ள G20 மாநாட்டிற்கான அழைப்பினை நிபந்தனைகளுடன் ஏற் றுக்கொண்டார் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி .

ரஷ்யப் போர் மற்றும் மாநாட்டில் கலந்துகொள்ளும் நாடுகளின் நிலைமையைப் பொறுத்து உக்ரைனுடைய பிரசன்னம் காணப்படும் எனவும், விடுக்கப்பட்ட அழைப்பினை மிகவும் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## ஜப்பானில்

## வரலாறு காணாத வெப்பம்

(டோக்கியோ)

ஜப்பானில் கடந்த 150 வருடங்களில் முதன் முறையாக வெப்பநிலையானது கிட்டத்தட்ட 40 டிகிரி செல்சியஸை எட்டியுள்ளது.

டோக்கியோவில் ஐந்தாவது நாளாக நேற்று முன்தினம் புதன்கிழமை 35 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

1875இல் பதிவான வெப்பநிலையை விட யூன் மாதத்தில் மிக மோசமான வெப்பமான காலநிலை பதிவாகியுள்ளது. கடுமையான வெப்பம் காரணமாக மின் துண்டிப்பை அமுல்படுத்த வழிவகுத்துள்ளது. இதனால் மக்கள் மின் சாரத்தை சேமிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-6)

## கொரே

## உல

(ஜெனி
கொரோ
ஏற்பட்டு
தொழிக்
தெரிவித்

அத்துடன், உல
ரீதியில் கொரோனா
தொற்றுப் பரவல் 110
மேலும் அதிகரித்
குறிப்பிடப்பட்டுள்ள

சு

## நேட்டே
## எதிர்ப்



(துருக்கி)


சுவீடன் மற்றும் பி
நேட்டோவில் இணை
தனது நிலைப்பாட்டை
துருக்கி ஜனாதிபதி
எர்டோகன் தெரிவித்
இதனால் சுவீடன்
ஆகிய இரு நாடுகளு
இணைவதில் துருக்
முட்டுக்கட்டை நீங்கி
'நேட்டோ உறுப்பு ந
மற்றும் பின்லாந்து இ
க்கி எதிர்ப்பு தெரிவி
நிலையில், ஸ்பெயின்
நேற்று முன்தினம்
ளுடனான கூட்டத்தி
இவ்விரு நாடுகளும்
ஆலோசனைகள் மே
இதில் தொடர்புடை
தலைவர்கள் பேச்
ஈடுபட்டனர். இதனை
துருக்கி தனது எதிர்ப்
கைவிட்டது. இதனை
திபதி ரெசெப் தை
தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ரோனா வைரஸ் பரவல் முழுமையாக அழிக்கப்படவில்லை

# லக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை




ஜெனிவா)

ரோனா வைரஸ் தொற்றுப் பரவலில் மாற்றம் ட்டுள்ளதே தவிர, வைரஸ் முழுமையாக இல்லா ழிக்கப்படவில்லை என உலக சுகாதார ஸ்தாபனம் வித்துள்ளது.


ன், உலகளாவிய ரோனா வைரஸ் வல் 110 நாடுகளில் திகரித்துள்ளதாக ட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றின் BA 4 மற்றும் BA 5 ஆகிய மாறுபாடுகள் காரணமாகவே இவ்வாறு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் குறித்து கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது கடினமான ஒன்றாக மாறியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து உலக நாடுகளும் தமது மக்கள் தொகையில் சுமார் 70வீதமானவர்களுக்கேனும் கொரோனா தடுப்பூசியை செலுத்துமாறும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சுவீடன், பின்லாந்து டோவில் இணைவதற்கான ப்பை கைவிட்டது துருக்கி




ற்றும் பின்லாந்து நாடுகள் இணைவதற்கு எதிரான ப்பாட்டை கைவிடுவதாக ாதிபதி ரெசெப் தையிப் தெரிவித்துள்ளார்.

சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகளும் நேட்டோவில் ல் துருக்கி போட்டு வந்த நீங்கியுள்ளது.

உறுப்பு நாடுகளாக சுவீடன் லாந்து இணைவதற்கு துரு தெரிவித்து வந்தது. இந் ஸ்பெயின் - மேட்ரிட் நகரில் தினம் நடந்த தலைவர்க கூட்டத்தில், நேட்டோவில் நிகளும் இணைவதற்கான கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்புடைய நாடுகளின் ர் பேச்சுவார்த்தையில் இதனைத் தொடர்ந்து, து எதிர்ப்பு நிலைப்பாட்டை இதனை துருக்கியின் ஜனா சப் தையிப் எர்டோகன்

இதனால், நேட்டோ உறுப்பினர்களாக சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகிய இரு நாடுகள் இணைவதில் இருந்த துருக்கியின் எதிர்ப்பு விலகியது. இதற்கான முத்தரப்பு நாடுகளுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இவ்வாறான நிலையில் சுவீடன், பின்லாந்து நாடுகள் நேட்டோவில் இணைவதற்கு இதுவரை இருந்து வந்த தடை நீங்கியதை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வரவேற்றார்.

துருக்கி தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதற்காக பைடன் பாராட்டு தெரிவித்தார்.

சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகிய இரு நாடுகளும் தகுதி வாய்ந்த இராணுவங்களை கொண்ட வலிமையான ஜனநாயக நாடுகள். அவர்கள் நேட்டோவின் உறுப்பினராவது அதன் கூட்டு பாதுகாப்புக்கு வலிமை சேர்க்கும். நேட்டோ உறுப்புரிமை தொடர்பில் சுவீடன், பின்லாந்து மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் மேற்கொண்ட முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு வாழ்த்துகள் [illegible] பைடன் தெரிவித்தார். [illegible]

## புடின் ஒரு பயங்கரவாதி உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி



(கீவ்)

உக்ரைனிய நகரமான க்ரெமென்சுக்கில் 1,000 க்கும் அதிகமான மக்கள் இருந்த ஒரு பல்பொருள் அங்காடியை ரஷ்ய ஏவுகணைகள் அழித்த இரண்டு நாட்களுக்குப் பிறகு, ரஷ்ய ஜனாதிபதி புடின் ஒரு "பயங்கரவாதியாக" மாறி விட்டார் என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார்.

குறித்த ஏவுகணை தாக்குதல்களில் 18 பேர் கொல்லப்பட்டனர்.


நான்கு மாதங்களுக்கும் மேலாக, ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளுக்கிடையில் மோதல் இடம்பெற்று வருகிறது.

ஆயிரக்கணக்கான உயிர்களை பலிகொண்ட இந்த மோதல் காரணமாக இலட்சக்கணக்கான மக்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு வெளியிட்டுள்ள காணொளி செய்தியில் ஜெலன்ஸ்கி,

பால்டிக் குடியரசுகள், போலந்து, மோல்டோவா மற்றும் கஜகஸ்தான் ஆகியவை மற்ற ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளுக்கு பயங்கரவாத நடவடிக்கையை கொண்டு வருவதைத் தடுக்க ரஷ்யாவை நீதியின் முன் கொண்டு வரவேண்டும் என தெரிவித்துள்ளார். (நி-6)

## போலந்தில் நிரந்தர இராணுவத் தளம் அமைக்க அமெரிக்கா தீர்மானம்



(வோஷிங்டன்)

போலந்தில் அமெரிக்கா நிரந்தர இராணுவத்தளத்தை அமைக்கும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

இதுவரை துருப்புக்கள் சுழற்சி முறையில் மட்டுமே இருந்துவந்த நிலையில், நேட்டோவின் கிழக்குப் பகுதியில் அமெரிக்கா தளத்தை நிறுவுவது இதுவே முதல் முறை.

ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமான நேட்டோ நாடுகளின் உச்சி மாநாட்டின் போது உரையாற்றுகையிலேயே பைடன் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், நேட்டோ வலுவானது மற்றும் ஒன்றுபட்டது. இந்த உச்சிமாநாட்டின் போது நாங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் மூலம், நாங்கள் எங்கள் கூட்டுப்பலத்தை மேலும் அதிகரிக்கப் போகிறோம். மேலும், போலந்தில் ஒரு நிரந்தர தலைமையகத்தை அமெரிக்கா அமைக்க உள்ளது என பைடன் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.ஓ.சி. தொடர்ந்து கைகொடுத்தால்
# யாழில் அனைவருக்கும் எரிபொருள்
## மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**ஐ.ஓ.சி.நிறுவனத்தினால் யாழ்.மாவட்டத்திற்கு எரிபொருள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் தொடர்ந்தும் அத்தியாவசிய சேவையினருக்கும், பொதுமக்களுக்கும் எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

தற்போதைய யாழ்.மாவட்ட எரிபொருள் விநியோகம் தொடர்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்திற்கு ஐ.ஓ.சி.விற்பனை நிலையத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற பெற்றோல் நேற்று முன்தினம் பொதுமக்களுக்கு அத்தியாவசிய தேவை உடையோருக்கு விநியோகிக்கப்பட்டது.

தொடர்ந்து ஐ.ஓ.சி. நிறுவனத்தினால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு எரிபொருள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில், அத்தியாவசிய சேவையினருக்கும், பொதுமக்களுக்கும் எரிபொருள் விநியோகிப்போம்.

குறிப்பாக இன்று முதல் எரிபொருள் விநியோகத்தின் போது பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டையில் பதிவுகளை மேற்கொண்டு விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என தெரிவித்தார். (4-6-18)

# முறைப்பாடுகளுக்கு தீர்வு முன்வைக்காத திணைக்களங்கள் மீது நடவடிக்கை
## வடக்கு ஆளுநர் எச்சரிக்கை

(அராலி)

பொதுமக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரால் வடக்கு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களத் தலைவர்களுக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் கோரிக்கை தொடர்பில் இதுவரை தீர்வுகள் முன்வைக்காத அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இனியும் பொறுமை காக்க மாட்டேன் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை ஆளுநர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் பொதுமக்கள் சேவையை அமைச்சர்கள் மாற்றும் திணைக்களங்கள் உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும்.

அமைச்சுகள்மற்றும்திணைக்களங்களில் பொதுமக்கள் தமது தேவையை திருப்திகரமாக பெற்றுக் கொள்ளாமை மற்றும் அமைச்சுக்கள்,திணைக்களங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் தான்றோன்றித்தனமான செயற்பாடுகள் தொடர்பிலும் என்னிடம் பல முறைப்பாடுகள் நேரடியாக கிடைக்கப்பெற்றன. அவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் சிலவற்றுக்கு இதுவரை அமைச்சுகள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்காமை தொடரில் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அரச சுற்றுநிருபங்களுக்கு அமைவாக முறைப்பாடு வழங்கும் நபர் ஒருவருக்கு உரிய காலப் பகுதியில் தீர்வை முன்வைக்க வேண்டியது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கடமையாகும்.

ஆகவே வடக்கு மாகாணத்தில் இதுவரை அமைச்சுகள், திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வு முன்வைக்காத வர்கள் மீது நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டேன் என ஆளுநர் எச்சரிக்கை விடுத்தார். (4-6-104)

# தென்மராட்சி கிராம உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகம் முன் போராட்டம்



(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்கப்படாமையால் நேற்று வியாழக்கிழமை மதியம் பிரதேச செயலக வாயிலை மறித்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "கிராம உத்தியோகத்தர்கள் எரிபொருள் நிரப்பு நிலையம் சென்றால் எரிபொருள் இல்லை எனத் திருப்பி அனுப்புகின்றனர்.

நாம் பொதுமக்களுக்கான கடமையில் ஈடுபட வேண்டும். ஆனால் எமக்கு பெற்றோல் இல்லை என்றால் நாம் எவ்வாறு சேவையில் ஈடுபடுவது? எமக்கான தீர்வினை பிரதேச செயலர், அரசாங்க அதிபர் ஆகியோர் பெற்றுத்தர வேண்டும். எமக்கான தீர்வு கிடைக்கும் வரை இந்தப் போராட்டம் தொடரும்" என மேலும் அவர்கள் தெரிவித்தனர். (4-6-30)

# கும்பாபிஷேகம்

(குப்பிழான்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் சைவப் பெருவள்ளலார் சேர்.பொன். இராமநாதனால் உருவாக்கப்பட்ட ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும்6 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணி முதல் காலை 7 மணி வரையான சுப முகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

மஹா கும்பாபிஷேகத்திற்கான பூர்வாங்க கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறும். (4-6-18)

# மன்னாரில் நேற்று பெற்றோல் விநியோகம்



(மன்னார்)

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள ஐ.ஓ.சி.எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை காலை முதல் வாகனங்களுக்கான பெற்றோல் வழங்கப்பட்டது.

இராணுவம் மற்றும் கடற்படையின் உதவியுடன் மன்னார் பிரதேச செயலக பணியாளர்களின் மேற்பார்வையில் வாகனங்களுக்கு பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளுக்கு 1500 ரூபாவிற்கும், முச்சக்கர வண்டிக்கு 2000 ரூபாவிற்கும், கார் உட்பட ஏனைய பெற்றோல் வாகனங்களுக்கு 2500 ரூபாவிற்கும் எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்பட்டது. (4-6-285)

# யுத்த காலத்தில் கூட இவ்வாறான நெருக்கடியை எதிர்கொள்ளவில்லை
## கிளிநொச்சியில் உறவுகள் குமுறல்

(முறிகண்டி)

இந்த அரசாங்கம் எமது பிள்ளைகளை காணாமல் ஆக்கிவிட்டு பொருளாதாரத்தாலும் எம்மை நசுக்குகின்றது என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சியில் இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த அவர்கள் யுத்த காலத்தில் கூட இவ்வாறான நெருக்கடியை நாங்கள் எதிர்கொள்ளவில்லை. ஆனால்



இன்று எரிபொருள், பசளை, உணவு உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றோம். எமது பிள்ளைகளை காணாமல் செய்த கோட்டாவின் அரசு இன்று எமக்கு பொருளாதார ரீதியில் நெருக்கடியை கொடுக்கின்றது. இவ்வாறான நிலையில் சர்வதேசம் தலையீடு செய்து எம்மையும், எமது பிள்ளைகளையும் மீட்பதற்கு உடன்நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று 1932 நாட்களாக தீர்வின்றி போராடி வருகின்றோம். இந்த நிலையில் எமது தாய்மார் அன்றாட உணவு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளிற்கு முகம் கொடுத்து வருகின்றனர். இந்த நிலை தொடராது எமது பிள்ளைகளிற்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிய வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். (4-6-100-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கலவரம் வெடித்தால்

## பொருளாதாரத்திற்கு மேலும் பாதிப்பு

### பொருளாதார நிபுணர் எச்சரிக்கை

(கொழும்பு)

**தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில் மக்கள் வன்முறை மற்றும் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவர் இவ்வாறான செயற்பாடுகளினால் பொருளாதாரத்திற்கு மேலும் பாதிப்பு ஏற்படும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.**

இதனை உணர்ந்து தியாகங்களைச் செய்ய வேண்டிய தருணம் வந்துள்ளது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலா நிதி. பிரியங்க துனுசிங்க தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"வன்முறை மற்றும் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அது ஹெய்ட்டி மற்றும் சோமாலியா நாடுகளில் ஏற்பட்ட சிவில் யுத்தம் போன்ற நிலைமை இலங்கையிலும் ஏற்படும்.

சட்டம் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்ப முடியாத நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்படும்.

தற்போது வரையிலும் அவ்வாறான நிலைமை ஒன்றை எரிபொருள் நிலையங்களில் பார்க்க முடிகின்றது.

இந்த நிலைமை தீவிரமடைந்தால் அரசாங்கத்தினால் நிலைமையை கட்டுப் படுத்த முடியாத சூழல் ஒன்று ஏற்படும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக ஜயந்த டி சில்வா



(கொழும்பு)

தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக ஜயந்த டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதம், நேற்று வியாழக்கிழமை காலை கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில்வைத்து ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தினால் கையளிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஆபத்தில் நோயாளர்கள்

### தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

தொற்றா நோய்கள் உட்பட பல்வேறு நோய்களுக்கான மருந்து வகைகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், நாட்டில் நோயாளிகளின் உயிருக்கு பாரிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்திக கங்கந்த தெரிவித்தார்.

தனியார் மருந்தக வாகனங்கள் மற்றும் மருந்து விநியோக நிறுவன வாகனங்களையும் அத்தியாவசிய சேவையாக கருதி எரிபொருளை உடனடியாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (நி-6)

# துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களால் 20 பேர் படுகொலை, 7 பேர் படுகாயம்

(கொழும்பு)

இலங்கையில் அண்மைக் காலமாக துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த மே 30 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை மாத்திரம் 20 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்தச் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் இதுவரை நான்கு சந்தேக நபர்கள் மட்டுமே கைதுசெய்யப்பட்டுள்ளனர். (நி-6)

# திருட்டில் ஈடுபட்ட முச்சக்கரவண்டி மின்கம்பத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டது



(கொழும்பு)

ராஜகிரிய ஒபேசேகர பகுதியில் எரிபொருள் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களில் எரிபொருள் மற்றும் உதிரிபாகங்களை திருடுவதற்கு பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டியொன்று மின் கம்பத்தில் கட்டித் தொங்க விடப் பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக ஒபேசேகரபுர பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். இவ்வாண்டு ஜூன் மாதம் ஆரம்பத்தில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்ட வாகனங்களில் எரிபொருளை திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு வெளியே எரிபொருள் பவுசருக்காக மக்கள் தங்கள் வாகனங்களுக்குள் காத்திருக்கும்போது கார் உதிரிபாகங்கள் மற்றும் எரிபொருட்கள் திருடப்பட்ட நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களின் எரிபொருள் இணைப்புகளை வெட்டி ஒரு திட்டமிடப்பட்ட கும்பல்கள் திருடி வந்துள்ளன. இவ்வாறு திருட்டு நடவடிக்கைக்காக பயன்படுத்திய முச்சக்கர வண்டியொன்றே இவ்வாறு மின்கம்பத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள பல்வேறு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விசேட பாதுகாப்பினை வழங்குவதற்குரிய நடவடிக்கையினை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வரும் நிலையில், பொது மக்கள் தொடர்ந்தும் வரிசைகளில் காத்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தொடர்ந்தும் முரண்பாடுகள் ஏற்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே எரி பொருள் நிரப்பு நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# தனுஷ்கோடி மணல்திட்டில் இறக்கி விடப்பட்ட இலங்கையர்கள்

(சென்னை)

இலங்கையைச் சேர்ந்த 10 பேர் தனுஷ்கோடி மணல் திட்டில் இறக்கி விடப்பட்ட நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை மேலும் தீவிரமடைந்து வரும் நிலையில்வாழ முடியாது தமிழ் நாட்டிற்கு அகதிகளாக புறப்பட் டவர்களே இவ்வாறு தனுஷ் கோடி மணல் திட்டு பகுதியில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மணல் திட்டில் இறக்கிவிடப்பட்ட நிலையில் உள்ளவர்கள் தொடர்பில் தகவல் கிடைக்கப்பெற்றதை அடுத்து அவர்களை மீட்க கடலோர காவல்படையினர் விரைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா, |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 280 | 280 | 280 | 300 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 600 | 450 |
| தக்காளி | 600 | 500 | 600 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 260 | 240 | 200 | 160 |
| கோவா | 320 | 250 | 350 | 320 |
| கரட் | 200 | 300 | 360 | 400 |
| பூசணி | 180 | 200 | 200 | 200 |
| புடோல் | 140 | 150 | 180 | 240 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 220 | 180 | 200 | 240 |
| பாகற்காய் | 400 | 400 | 450 | 600 |
| வெண்டிக்காய் | 200 | 150 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 240 | 240 | 250 |
| பயற்றங்காய் | 120 | 200 | 240 | 200 |
| லீக்ஸ் | 200 | 250 | 180 | 280 |
| பீற்றூட் | 350 | 250 | 280 | 360 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 500 | 600 |
| போஞ்சி | 600 | 450 | 600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 220 | 150 | — | 270 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 60 | 80 |
| தேசிக்காய் | 300 | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 70 | 60 | 50-70 |
| இராசவள்ளி | 180 | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 450 | 400 | 500 |
| முள்ளங்கி | 160 | 150 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | — | 150 | — | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## காதில் விழாதது!

கங்காதரன் தன் ஊரிலிருந்து கிளம்பி முப்பது மைல் தொலைவிலுள்ள தன் மாமனார் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தான். உச்சி வேளைக்கு அவன் நல்லூரை அடைந்த போது அவனுக்கு ஒரே பசியும் தாகமுமாக இருந்தது. அதனால் ஒரு வீட்டை அடைந்து அங்கு திண்ணையில் உட்கார்ந்திருந்த இளைஞனிடம் "தம்பி வெகு தூரம் நடந்து களைத்து வந்திருக்கிறேன். அயலூரானான எனக்கு ஏதாவது சாப்பிடக் கொடுத்தால் புண்ணியம் உண்டு" என்று கேட்டான்.

அந்த வீட்டில் உள்ளவர்களெல்லாம் பீரங்கிச் செவிடு. அது கங்காதரனுக்குத் தெரியாது. அவன் கூறியதைக் கேட்டு அந்த வாலிபன் சட்டென எழுந்து உள்ளே சென்றான். அவன் தன் தங்கையிடம் "இதோ பார் வாசலில் யாரோ ஒரு தடியன்; வந்து உன்னை கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகக் கூறிக் கொண்டிருக்கிறான். இப்போது இந்த விடயம் ஊர் முழுவதும் பரவப் போகிறது. இது வெளியில் தெரிந்தால் நமக்குத் தானே அவமானம்" என்று கத்தினான்.

அந்தப் பெண் தன் தந்தையிடம் போய் "பாரப்பா இந்த அண்ணனை! எனக்கு இந்த வீட்டில் பங்கு கிடையாது என்கிறான். இப்போது பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு என்ற சட்டம் வந்திருக்கிறது. இது அவனுக்குத் தெரியாது போலிருக்கிறது. இவன் யார் எனக்கு இந்த வீட்டில் பங்கு இல்லை என்று சொல்ல? நான் விட மாட்டேன். நீதிமன்றம் வரை போவேன்" என்றாள்.

அவளது தந்தை உடனே கொல்லைப்புறத்திற்குப் போய் அங்கு தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த தன் மனைவியிடம் "நீ இன்று சமையல் செய்யப் போவதில்லை என்று உன் மகளிடம் சொன்னாயாமே. என்னால் பட்டினி கிடக்க முடியாது. போய் சமையலை முதலில் கவனி" என்று விரட்டினான்.

அவள் வீட்டிற்குள் போய் உட்கார்ந்திருந்த தன் மாமியாரிடம் "நீங்கள் உங்கள் மகனுக்கு இந்த ஐம்பது வயதில் இன்னொரு கல்யாணம் செய்து வைத்து விட்டு என்னை விலக்கியா வைக்கப் போகிறீர்கள்? இது என்ன அநியாயம்! நான் உயிரோடு இருக்க என் கணவருக்கு இன்னொரு மனைவியா? அது நடக்காது. நான் ஊரையே கூட்டிப் பஞ்சாயத்து கேட்பேன். அப்போது உங்கள் மானம் கப்பலேறி விடும் தெரிந்ததா?" என்று கத்தினாள். அந்தக் கிழவியும் "என்ன சொன்னாய்? என்னையா வீட்டை விட்டுப் போகச் சொல்கிறாய்? முடியாது.

இது என் கணவன் வீடு. அவரும் அவருடைய முன்னோர்களும் வாழ்ந்த வீடு. இது சுற்றுப் பக்கத்து கிராமத்தவர்களுக்கு எல்லாம் தெரியும். நேற்று வந்த நீ என்னையா வெளியே போகச் சொல்கிறாய். (தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்




அதன் கூந்தலைப் பற்றி இழுத்து வந்து அனுமன் முன் நிறுத்தி அவனைப் பதற வைத்தான் இந்திரஜித்து. "பாவி மகளே! நீ வந்து தானே அரக்கர் ஆவியை அழித்தாய், என் தந்தையை மயக்கி, அவரையும் அழிக்கத் தொடங்கினாய்" என்று கூறி அவ்வுருவத்தைத் தன் வாளால் தடிந்தான்; குருதி கொட்டியது" 'அவள் சீதையே' என்று தவறாய் நினைத்தான் அனுமன், துடித்து அழுதான்.

"இது முன்னுரை; பின்னுரை ஒன்று உள்ளது" என்றான் இந்திரஜித்து.

"அயோத்திக்குச் சென்று தம்பி பரதனையும் தாயார் மூவரையும் இதேபோல வெட்டி மாய்க்கப் போகிறேன்" என்று கூறி, அனுமன் காணும்படி அயோத்தி நோக்கி வடதிசை பறந்தான்.

இந்த அதிர்ச்சி தரும் செய்தியும், அஞ்சத்தக்க நிகழ்ச்சிகளும் அனுமனை அலைத்தன; அவனை நிலைகொள்ளச் செய்யவில்லை; தலைவனைக் கண்டு பேசிப் பகைவர் உயிர்களுக்கு உலைவைக்க ஓடினான்; மலை குலைந்தாலும் நிலை குலையாத மன்னன் மகன் மனக்குழப்பத்தில் ஆழ்ந்தான்; 'இது உண்மை' என்று கருதி இடரில் விழுந்தான். அரக்கர் மாயைகளை அறிந்த வீடணன், உண்மை அறிய, வண்டு வடிவம் கொண்டு சென்று சீதையைக் கண்டு வந்தான். அவளை அசோகவனத்தில் அசோக வனத்தில் முன்பு இருந்த நிலையிலேயே கண்டான்; காற்றுக்கு அசையும் இலை தழைகளைப் போல அவள் உயிர்ப்பு அசைவைக் காட்டியது அனுமனுக்குச் செல்ல இருந்த உயிர் திரும்பி வந்தது.

'சீதை சாகவில்லை; அவர்கள் திட்டம் வேகவில்லை' என்பதை உணர்ந்தனர். 'திசை திருப்பச் செய்த சூழ்ச்சி இது' என்பதை அறிந்தனர். அரக்கன் மகன் இந்திரஜித்து நிகும்பலை வேள்வி நடந்துவதை அறிந்து, குரங்குப் படைகளோடு சென்று அவனைத் தாக்கினர்; வெண்ணெய் திரளும் போது அவனுக்குத் தாழி உடைந்தது; எடுத்த வேள்வி முற்றுப் பெறவில்லை; நிறைவுரை எழுதுதற்கு முன் இலக்குவன் விட்ட அம்புகளுக்கு அவன் பதிலுரை சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. போரில் தேரை இழந்தான்; படைகள் அழிந்தன; தனித்து நின்று அவன் போர் செய்து பழக்கம் இல்லை; செல்வ மகன்; அவன் கால்கள் செருக்களத்தில் பதியா; மண்ணில் படியா; விமானம் ஏறி விண்ணில் பறந்து மன்னன் இராவணன் முன் சேர்ந்தான்.

தேர்வில் தோற்று விட்டுத் தேர்வாளர்களைப் பழிக்கும் மாணவரைப் போல பகைவர்மேல் பழி போட்டு விட்டுப் பரிதாபகரமாய் நின்றான்.

படைகள் அழிவு பெற்ற மனக்கலக்கத்தோடு மாரதனான இந்திரஜித்து, அழிவின் விளிம்பைக் கண்டான்; இதுவரை "மூத்தோர் வார்த்தைகள் அர்த்தமற்றவை" என்று அறிவித்த அவன், மனம் மாற்றி வயதுக்கு மீறிய அறிஞனாய்ச் செயற்பட்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையில் துவாரமிருந்தால் அதில் பணத்தை நிரப்பிப் பலனில்லை.
- ஜார்ஜ் எலியட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் காலம் வந்துவிட்டது

எரிபொருள் இல்லாமையால் நாடு கந்தறுந்து கிடக்கிறது.

அரச திணைக்களங்கள் ஊழியர்களின் வரவின்றி வெறிச்சோடிப் போயிற்று.

தவிர, தொழில் முயற்சிகள் அனைத்தும் முடங்கிய நிலையில் எதுவும் செய்ய முடியாத மிக இறுக்கமான நெருக்கடிக்குள் நாடு சிக்குப்பட்டுள்ளது.

ஜூலை 22க்கு முன்னதாகப் பெற்றோல் கிடையாது. ஜூலை 11க்கு முன்பாக டீசல் இல்லை என்று இந்த நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

நிலைமை இதுவாக இருக்க, இப்போது தான் மத்திய கிழக்கு நாடுகளுக்கு எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர விஜயம் செய்து எரிபொருள் தாருங்கள் என இரந்து நிற்கிறார்.

பொருத்தமான திட்டமிடல்கள் இல்லாத நாடாக இலங்கை மாறிவிட்ட பின்பு தேவையான நேரத்தில் எதுவும் கிடையாது என்பது உறுதியாகிவிட்டது.

இந்தநிலைமை எப்போது இல்லாமல் போகும் என்பது மக்களின் கேள்வியாக இருக்க, தனது பதவிக்காலம் முடியும்வரை ஜனாதிபதியாக இருப்பேன் எனக் கூறிய கோட்டாபய ராஜபக்ஷ இப்போது செல்லாக் காசாகிவிட்டார்.

அவர் ஜனாதிபதியாக இருந்தாலென்ன இல்லாமல்விட்டாலென்ன என்பதாக நிலைமை மாறிவிட்டது.

மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகியபோது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தனது பதவியில் இருந்து விலகியிருப்பாராயின் இலங்கைக்கு உலக நாடுகள் உதவி செய்திருக்கும்.

ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியில் நீடித்திருப்பதை விரும்பியதன் காரணமாக, ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார்.

கடந்த பொதுத் தேர்தலில் மக்களால் ஒதுக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்று பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பார் என எதிர்பார்த்தால் அதைவிட்ட மடமைத்தனம் வேறெதுவுமாக இருக்க முடியாது.

உண்மை, ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற கையோடு வெளிநாட்டுத் தூதுவர்களை அசுரவேகத்தில் சந்தித்தார்.

இதோ! உலக நாடுகளிடம் இருந்து உதவிகளைப் பெற்று நாட்டை தூக்கி நிறுத்துகிறேன் என்பதாக காட்டாப்புக் காட்டிய பிரதமர் ரணில் இப்போது வெட்டிப்பாம்பாகிவிட்டார்.

ஆக, நாட்டு மக்களின் அகிம்சைப் போராட்டம் ராஜபக்ஷ தரப்பைக் கூண்டோடு வெளியேற்றி நாட்டை காப்பாற்ற இருந்த வேளை, அதனை முறியடித்து நாட்டைப் பெரும் பஞ்சத்துக்குள் தள்ளிவிழுத்தியவர் பிரதமர் ரணில்.

அவர் விரைவில் மானம் இழந்து பதவி துறந்து வீடு போவார் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

ஆனால் அதற்கு முன்னதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகிப் பரதேசம் செல்லும் காலம் நெருங்கிவிட்டது.

அதை அவராகச் செய்தால் மகிந்தவுக்கு நேர்ந்ததைவிட, ரணிலுக்கு நேரப் போவதை விட இது பரவாயில்லை என்பதாக வரலாறு எழுதப்படும்.

# மேலதிக எண்ணெய்த் தாங்கி மூலம் நாடு முழுவதும் எரிபொருள் விநியோகம்

## லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

மேலதிக எண்ணெய்த் தாங்கி ஊர்திகள் மூலம், நாடுமுழுவதும் உள்ள தங்களது எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் நாட்டிலுள்ள சகல ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இது தொடர்பான அறிவிப்பு தங்களுக்கு விடுக்கப்பட்டதாக தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர் சங்கம் தெரிவித்திருந்தது.

நேற்று முன்தினம் சுமார் 150 ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டதாக அந்த சங்கத்தின் பிரதான செயலாளர் சாந்த சில்வா தெரிவித்தார்.

எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக, லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் மக்கள் தொடர்ந்தும் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

கனியவள கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில், எரிபொருள் விநியோகிக்கப்படமாட்டாது என மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தையடுத்து ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையங்களை மக்கள் நாடுகின்றனர். (ம-7)

## துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொலன்னாவ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உந்துருளியில் பயணித்த ஒருவரே இவ்வாறு துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## நாடளாவிய ரீதியில் பத்திரிகை விநியோகம் வரையறை

(கொழும்பு)

எரிபொருள் நெருக்கடி காரணமாக நாடளாவிய ரீதியில் பத்திரிகை விநியோகப் பணிகள் வரையறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்புக்கு அப்பாலுள்ள சில பகுதிகளில், கடந்த சில நாட்களாக பத்திரிகை கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் இன்மையால், கொழும்பின் சில பகுதிகளில், நேற்றைய தினம் பத்திரிகை விநியோகிக்கப்படவில்லை என பத்திரிகை விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் வாகனங்களுக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் கடந்த நாட்களில் சிக்கல் ஏற்பட்டிருந்த நிலையில், இன்றைய தினம் அந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ம-7)

### மாணவிக்கு நீதி கோரி

## யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழில் அண்மையில் கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட பாடசாலை மாணவிக்கு நீதி வேண்டி, மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண காரியாலயத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மாணவி, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், நேற்று முன்தினம் வைத்தியசாலையின் மாடியிலிருந்து குதித்து உயிர் மாய்க்க முயற்சித்துள்ளார்.

குறித்த மாணவிக்கு நீதி வேண்டும் என தெரிவித்து பாடசாலை மாணவர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினர் இணைந்து நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளதுடன், மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டையும் பதிவு செய்துள்ளனர்.

மேலும் "சிறுவர் உரிமைகளை பாதுகாக்க வேண்டும்", "கடத்தப்பட்ட மாணவிக்கு நீதி வேண்டும்" போன்ற வாசகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7)

## தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு பொலிஸ் மரணம்

(கொழும்பு)

உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர், தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு, உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் கடவத்த - கோனஹேன பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமில் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

மேற்படி முகாமின் ஆயுதக் களஞ்சியப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வந்த அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

59 வயதான குறித்த உப பொலிஸ் பரிசோதகர், கடுவலை - ஜல்தர பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. (ம-7)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

உண்ணுகின்ற உணவை பல் மெல்லவும், நாவில் நீர் ஊறவும் அமைத்தார். நம்முடைய உடம்பில் எல்லா அவயங்களிலும் நரம்புகள் உள. நரம்புள்ள பகுதிகள் சுளுக்கிக் கொள்ளும். நாவில் நரம்பு வைத்திருந்தால் ஒரு நாளுக்கு நூறு முறையாவது சுளுக்கிக் கொள்ளும். விளக்கெண்ணெய் தடவி உருவ வேண்டி வரும். இறைவன் கருணையினால் இடையறாது பேசுகின்ற நாவை நரம்பின்றி படைத்துக் கொடுத்தான். அவன் கொடுத்த நாவினால் அவனுடைய நாமங்களை சொல்லுதல் நன்றி பாராட்டுதலாகும். அவன் கொடுத்த தலையினால் அப் பரமபிதாவை வணங்குதல் நன்றிக் கடனாம். வடமொழியில் காலையும் மாலையும் கடவுளை வணங்குவதை .சந்தியா வந்தனம் என்பார்கள். சம் - செவ்வையாக, தியா - தியானித்து. வந்தனம் - வணங்குவது சந்தியா வந்தனமாகும்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பெரும் அச்சத் தவிப்பை எப்படி கையாள்வது

விவேகத்துடன் இருக்கவும் உணர்ச்சி வயப்படாது எல்லாம் ஏதோ ஒரு வழியில் முடிந்துவிடும் என்றும், அது ஒரு பொருட்டேயல்ல என்றும் கொள்க. தியானமும் மூச்சுப்பயிற்சியும் உங்களை சாந்தப்படுத்தும். செய்து கொண்டிருக்கும் வேலையை அப்படியே செய்துவிட்டு முற்றிலும் சம்பந்தமேயில்லாத ஒன்றைச் செய்யவும், உதாரணமாக , வீட்டை அலங்கரித்துக் கொண்டிருக்கும் போது அதை நிறுத்திவிட்டு தோட்டவேலை செய் யுங்கள், அல்லது பொருட்கள் வாங்க கடைக்குச் செல்லுங்கள். மிக முக்கியமான ஒன்றைச் செய்து கொண்டிருக்கும் போது, அதை விட்டுவிட்டு முற்றிலும் வேறான ,சம்பந்தமேயில்லாத, அற்பமான ஒன்றைச் செய்வது, உங்களுடைய படைப்பாற்றலை அதிகரிக்கும்/ உயர்த்தும்.

சம்பந்தப்பட்ட செயல் உங்களை அச்செயலோடு பிணைக்கிறது. சம்பந்தமில்லாச் செயல் வாழ்க்கையை விளையாட்டாக்குகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 1,900 லீற்றர் எரிபொருளுடன் நபர் ஒருவர் கைது

(பதுளை)

பதுளை- கிரந்துரு கோட்டையில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1,900 லீற்றர் எரிபொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரந்துரகோட்டை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளபட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் 42 வயதுடைய ஒருவர் என்றும் அவரிடமிருந்து சுமார் ஒன்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான 1,900 லீற்றர் டீசல் மற்றும் 19 லீற்றர் பெற்றோல் மீட்கப்பட்டுள்ளது. (4-6)

# வவுனியாவை சேர்ந்த நால்வர் இந்தியாவில் தஞ்சம்

(வவுனியா)

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக வவுனியா மாவட்டத்திலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் அகதிகளாக தனுஷ்கோடி சென்றுள்ளனர்.

இலங்கை தமிழர்களை மீட்ட மரைன் பொலிஸ் இராமேஸ்வரம் மரைன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைக்கு பின்னர் 4 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்படுவார்கள் என தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரை இலங்கைத் தமிழர்கள் 96 பேர் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கரவெட்டி

### நெல்லியடி நவீன சந்தை புதிய கட்டடத் தொகுதியிலுள்ள கடைகள் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2022

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளினை உள்ளூராட்சித் திணைக்களத்தின் 1980/46 ம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஒரே முறையில் செலுத்தக்கூடிய ஆகக் கூடிய கேள்வித் தொகையினை இச்சபைக்கு செலுத்துபவர்களுக்கு ஏப்ரல் மாதம் தொடக்கம் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 01.07.2022
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-14.07.2022 பி.ப. 3.00 மணிவரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி:-15.07.2022 காலை 10.30 மணிக்கு.
04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடை இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு உரிய தினத்திற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால்மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்க்கப்படல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
06. கேள்விப்படிவத்தினை தலைமை அலுவலகத்தில் தேசிய அடையாள அட்டையை காண்பித்து உரிய படிவக் கட்டணம், மீளளிக்கப்படும் வைப்பு பணம் என்பவற்றைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
08. விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் குறைந்தபட்சம் 05 வருடங்களுக்கு ஒரு முறையாவது வாடகைப் பணம் மீளாய்வு செய்யப்படும். அவசியமேற்பட்டால் வருடத்திற்கு 01 முறை மீளாய்வு செய்யப்படும். இம்மாற்றத்திற்கேற்ப வாடகைக் கட்டணம் மாற்றம் அடையும்.
09. அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக் கமைவாக விண்ணப்பிக்கலாம்.
10. மாதாந்த வாடகைப் பணத்தை அடுத்துவரும் மாதம் 10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்குவாடகைப்பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
11. கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரிசையாக நிலுவையில் உள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவராவர்.
12. குத்தகைக்கு பெற்ற கடையின் மின்சார இணைப்புக் கட்டணங்கள் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.
13. இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் சபையுடன் செய்து கொள்ளும் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டிய பொறுப்புடையவராகின்றார்.

**மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

நெல்லியடி நவீன சந்தைக் கடைகள் கேள்வி அட்டவணை

| தொ.இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| UPPER FLOOR | | | | | |
| 01 | UF15 | 510,000.00 | 5,100.00 | 1,000.00 | 4,250.00 |
| 02 | UF 18 | 390.000.00 | 3,900.00 | 1,000.00 | 3,250.00 |
| 03 | UF 19 | 390,000.00 | 3,900.00 | 1,000.00 | 3,250.00 |
| 04 | UF 20 | 390,000.00 | 3,900.00 | 1,000.00 | 3,250.00 |
| 05 | UF 21 | 390,000.00 | 3,900.00 | 1,000.00 | 3,250.00 |
| 06 | UF 26 | 360,000.00 | 3,600.00 | 1,000.00 | 3,000.00 |
| 07 | UF 27 | 360,000.00 | 3,600.00 | 1,000.00 | 3,000.00 |

**க.த.ஐங்கரன்**
**தவிசாளர்**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**

01.07.2022 (சி-4560)

# கிளிநொச்சி வலைப்பாட்டிற்கு பேருந்து சேவை நடத்தவும்

(அக்கராயன்)

கிளிநொச்சியில் இருந்து வலைப்பாட்டிற்கான இலங்கை போக்குவரத்து சபையின் சேவையினை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டின் பின்னர் குறித்த பேருந்து சேவை நடாத்தப்பட்ட போதிலும் தற்போது இப்பேருந்து சேவை நடைபெறுவதில்லை. இதன் காரணமாக புதுமுறிப்பு, ஊற்றுப்புலம், கோணாவில், கந்தபுரம், அக்கராயன், ஆரோக்கியபுரம், ஆனைவிழுந்தான்குளம், வன்னேரிக்குளம், ஜெயபுரம், கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு வரையான கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் குறித்த பேருந்து சேவை நடத்தப்பட்டால் பெரும் பயனடைவார்கள்.

இந்நிலையில் குறித்த பேருந்து சேவையினை நடாத்துவதற்கு கிளிநொச்சி இலங்கை போக்குவரத்து சபையின் கிளை முகாமையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மேற்படி கிராம மக்களின் கோரிக்கையாக உள்ளது. (4-6-350)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவத்தை தாக்க முயற்சி


## ஒருவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் இராணுவ அதிகாரி மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்ததுடன், அதிகாரியின் கடமைக்கு இடையூறை ஏற்படுத்தியதாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, பண்டாரவன்னியன் சதுக்கப் பகுதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்திலேயே நேற்று முன்தினம் இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் பெறுவதற்காக வரிசையில் நின்ற கனரக வாகனம் ஒன்று நீண்ட நேரம் டீசல் வழங்காமையால் வரிசையில் இருந்து வெளியேறிச் சென்றிருந்தது. இரவு டீசல் வழங்கப்பட்ட போது தான் குறித்த இடத்தில் நின்றதாக தெரிவித்து கனரக வாகன சாரதி டீசலை பெற முயற்சித்துள்ளார். இதற்கு ஏனைய வாகன சாரதிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதன்போது குறித்த குழப்பத்தை சமரசப்படுத்தி குறித்த கனரக வாகனத்தை அங்கிருந்து வெளியேறுமாறு இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

அவ்விடத்தில் குறித்த கனரக வாகன சாரதிக்கும், இராணுவ அதிகாரிக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டதுடன், இராணுவ அதிகாரி மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த சாரதி இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு உடனடியாக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த வவுனியா பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (4-6-250)



அராலி மேற்கு, நீளத்திக்காடு அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயத்தின் வேட்டைத் திருவிழா கடந்த 27 ஆம் திகதி வெகு சிறப்பாக நடைபெற்றது. (படம்-கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளத்திலிருந்து...

நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

குளத்தில் நீராடச் சென்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாங்குளத்தைச் சேர்ந்த 19 வயது டைய ரகு என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர். (ம-7,100)

## பேருந்து...

பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட் டுள்ளன.

அதற்கமைய ஆகக்குறைந்த பேருந்து கட்டணம் 32 ரூபாயிலிருந்து 40 ரூபா யாக உயர்த்தப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய கட்டணங்கள் 22 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவர த்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பேருந்துத் தொழிற்சங்கங்கள் கோரிய ஆகக்குறைந்த கட்டணம் 40 ரூபாய் மற்றும் 30 சதவீத பேருந்து கட்டண அதிகரிப்பு உள்ளிட்ட பேருந்து கட்டண திருத்தம் தொடர்பான பரிந்துரையை தேசிய போக்க வரத்து ஆணைக்குழு, போக்குவரத்து அமைச்சிடம் நேற்று முன்தினம் (29) சமர்ப்பித்திருந்தது.

எவ்வாறிருப்பினும், போக்குவரத்து அமைச்சின் முன்மொழிவுக்கமைய, 22 சதவீதத்தினால் பேருந்து கட்டணங்களை அதிகரிக்கவும், குறைந்த கட்டணத்தை 40 ரூபாயாக அதிகரிக்கவும் அனுமதி வழங் கப்பட்டுள்ளது. (ம-7)

## பொருளாதார...

இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எதிர்நோக்கும் தற்போதைய நிலைமையை தாம் அறிந்திருப்பதாகவும் நாடு விரைவில் மீண்டுவிடும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஜூலி சங் தெரிவித்துள்ளார். (ம-7)

## அராஜக ஆட்சி...

தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்களால் வீடு செல்லுமாறு வலியுறுத் தப்படுபவர்தான் கோட்டாபய. மக்களால் விரட்டியடிக்கப்பட்டவர்தான் ரணில். இவர் கள் இருவராலும் நாட்டை ஆள முடியாது. மக்களுக்கு நல்லதைச் செய்ய முடியாது.

சர்வதேசம் எமது நாட்டுக்கு உதவும். ஆனால், எம்மைத் தூக்கிவிடாது. நாம் தான் எழ வேண்டும். அதற்கான அரசியல் தலைமைத்துவத்தை வழங்க தேசிய மக்கள் சக்தி தயார். தேர்தல் நடத்தப்படும் வரை இடைக்கால அரசைப் பொறுப்பேற்க வும் நாம் தயார்" என்றார். (ம-7)

## முதற்தடவையாக...

உணவு அல்லாத பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் 42.4 வீதத்தால் அதிகரித்துள்ளன.

எரிபொருள் பற்றாக்குறையினால் மரக்கறி வகைகளின் விலைகள் வெகு வாக அதிகரித்துள்ளன.

அரிசி, தானிய வகைகள் உள்ளிட்ட ஏனைய உணவுப்பொருட்களின் விலை கள் அதிகரித்தமையும் இந்த மாதத்தில் பணவீக்கம் அதிகரித்தமைக்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது. (ம-7)

## அரசை பதவி...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒன்றிணைந்த அரசை விரட்டுவோம் எனும் தொனிப்பொருளில் இந்த ஆர்ப் பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் கட்சியின் பெருந் திரளான ஆதரவாளர்கள் பங்கேற்றனர்.

இந்தப் போராட்டம் காரணமாக கொழும்பு - கோட்டைப் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதேவேளை, குறித்த பகுதியில் பொலி ஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (ம-7)

## பலாலி விமான...

ளுக்கிடையேயான சேவைகளை முன் னெடுக்க தீர்மானிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ம-7)

## சர்வதேச நாடு...

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதிக் கதிரையில் கோட்டாபய ராஜபக்ஷ இருக்கும் வரைக்கும் இலங் கைக்கு சர்வதேசம் உதவ முன்வராது. அதேவேளை, இலங்கையில் தற்போதைய கடியும் தீராது. இது ...

எனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகப் பதவி விலகி வீடு சென் றால்தான் தற்போதைய பிரச்சினை களுக்குத் தீர்வுகாண முடியும்."

"கோட்டாபய ஜனாதிபதிப் பதவியில் இருக்கும் வரைக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவாலும் ஒன்றும் செய்ய முடியாது. அதனால்தான் பிரதமர் ரணில் நாளாந்தம் ஊடகங்கள் முன்னிலையில் பிரச்சினைகளை மாத்திரம் கூறுகின் றாரே தவிர அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கின்றார் இல்லை.

இலங்கையின் தற்போதைய நிலைமை நாளாந்தம் மோசமடைகின் றது. மக்கள் பொறுமை இழந்துவிட் டார்கள்.

இந்த நாட்டை மீட்க வேண்டுமெனில் ராஜபக்ஷ குடும்பம் கூண்டோடு வீடு செல்ல வேண்டும். அப்போதுதான் நாட்டுக்கு விடிவு கிடைக்கும்" என்றார். (ம-7)

## ராஜபக்ஷக்களை...

என்பதோடு, கொள்ளையர்கள் அனை வரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நிச்சயம் தண்டனை பெற்றுக் கொடுக் கப்படும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பு - புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கருகில் நேற்று வியாழக் கிழமை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகை யில்,

எமது தாய்நாடு முழுமையாக அழிவை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் வாழ முடியாமல் கடும் நெருக் கடிகளை எதிர்கொண்டிருக்கும் சந்தர்ப்ப மாகும்.

மக்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கின்றனர். சகல தொழி ற்துறைகளும்பாரிய வீழ்ச்சியடைந்துள் ளன. கர்ப்பவதிகள், தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கு தேவையானபோஷா க்குணவுகள் இல் லாமலாக்கப்பட்டுள் ளன.

220 இலட்சம் மக்களும் இவ் வாறு பாதிக்கப்பட் டுள்ள நிலைமை க்கு மத்தியிலும் இந்த ஆட்சியாளர் கள் எரிவாயு மற் றும் மக்களுக்கு கிடைக்கப் பெறும் நிவாரணங்களில் மோசடி செய்கின் றனர்.

கொள்ளையர்க ளான ராஜபக்ஷக் களை நாட்டிலிரு ந்து வெளியேற்ற அனைவரும் ஒன் றிணைய வேண் டும். இவர்களால் கொள்ளையடிக்க ப்பட்ட பணம், டொலர் மற்றும் தேசிய சொத்துக் களை மீளப் பெறு வதோடு மாத்திர மன்றி, கொள்ளை யடித்த அனைவ ரையும் சட்டத்தின் முன் நிறுத்தி தண் டனை பெற்றுக் கொடுப்போம்.

நாட்டில் இல்லாமல்போயுள்ள தேசிய சொத்துக்களையும் டொலர்களையும் நிச்சயம் மீளப் பெறுவோம். பிரதமர், அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச் சர்கள் பதவிகளை எம்முன் கொண்டு வர வேண்டாம். அவற்றுக்கு ஏமாந்து மக் களை காட்டிக் கொடுப்பதற்கு நாம் தயாராக இல்லை.

நாம் கொள்கைகளையும் சட்டத்தை யும் நியாயத்தையும் மதிப்பவர்கள். புதிய மக்கள் ஆணையுடன், எம்மவர்களி லேயே 113 உடன் நாட்டின் அரசாட்சியை அமைப்பதற்கு தயாராகுங்கள். 220 இலட்சம் மக்களை வாழ வைக்கும். கொள்ளையர்களை நாட்டிலிருந்து விரட்டி யடிக்கும் ஜனநாயக அரசாட்சியை நிறுவும் யுகத்திற்குச் செல்ல அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்றார். (ம-7)

# ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருட்டு

(கொழும்பு)

கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பார்க்தோட்ட பிரிவான தேயிலை மலை ஸ்ரீ பாலதண்டாயுதபாணி ஆலயத்தின் இரண்டு அடி உயரம் கொண்ட வெள் ளியால் உருவாக்கப்பட்ட உண்டியல் 29 ஆம் திகதி புதன் இரவு மர்ம நபர்களினால் உடைக்கப்பட்டு பெரும் தொகையான பணம் களவாடப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்தின் யன்னல் பகுதியூ டாக உள்ளே சென்ற திருடர்கள் ஆலயத் தின் உள்ளே காணப்பட்ட உண்டியலின் பூட்டை உடைத்து உண்டியலில் காணப் பட்ட பெருந் தொகையான பணத்தை களவாடி உண்டியலை ஆலய வெளிப்ப குதியில் வீசியுள்ளனர். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 30/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1280
வெற்றி இலக்கங்கள்
மீனம் 0 3 0 1 5 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.06.30
சீட்டிழுப்பு இலக்கம் 3044
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
L 23 25 37 59
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 30/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1150
C 14 29 39 47 55

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.30
சீட்டிழுப்பு இலக்கம் 111
கும்பம் 16 25 27 29 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/06/30
சீட்டிழுப்பு இலக்கம் 4802
C 5 0 2 6 7 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.06.30
சீட்டிழுப்பு இலக்கம் - 832
D 08 13 31 43

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1603
சீட்டிழுப்பு திகதி : 2022.06.30
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,998,820/-
வெற்றி இலக்கங்கள்
11 20 31 55 D

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.30
சீட்டிழுப்பு இல : 3938
வர்ணம் : சிவப்பு
ரூ. 2,921,440/-
வெற்றி இலக்கங்கள்
21 48 51 61 T

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,143,623.40
திகதி 2022-06-30
வெற்றி வாரம் 3489
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள்
02 20 42 50
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,747,520/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 03 15 24 49 57
சீட்டிழுப்பு வாரம் 953
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2022.06.30 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 245,658,913/-
தொலைபேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1777
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.06.30
தினம் வியாழக்கிழமை
E 42 46 49 64
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 2,143,200/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 01 . 1929

மறைவு 30 . 06 . 2022

## கந்தையா தம்பிராசா

**(Rtd Investigation Inspector of Postal Department - I.I)**

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் இல.78, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வாழ்விடமாகவும் கொண்ட கந்தையா தம்பிராசா (Rtd Investigation Inspector of Postal Department - I.I) நேற்று (30.06.2022) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லபிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விஷாலாட்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, பாலசிங்கம், தியாகராசா, ராஜேஸ்வரி மற்றும் பத்ம சிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தமிழருவி த.சிவகுமாரன், சிவபாலன் (ஆசிரியர்), சிவகணேசன் (செய்தி ஆசிரியர் - தினக்குரல்), சிவராணி (சிரேஷ்ட விரிவுரையாளர் - மொழியியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்), சிவசோதி (ஆசிரியர் - யாழ்.ஆனைப்பந்தி M.M.V) ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரதேவி, கலாராணி, பேராசிரியர் சி.சிறீசற்குணராசா (துணைவேந்தர் - யாழ்.பல்கலைக் கழகம்), சுதர்ஜனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனகன் (Chartered Engineer), கௌதமன் (Senior Software Engineer), மதங் கன் (தாதியர் பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்), பராபரன் (மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), பவித்திரன் (விஞ்ஞானபீடம் - யாழ். பல்கலைக்கழகம்), சிறிசங்கர்ஷண் (யாழ்.இந்துக் கல்லூரி), தாமிரா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.07.2022) வெள்ளிக் கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.78, யாழ்.இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (12033)

தகவல்: குடும்பத்தினர்

DCM யாழ்.நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)
A/L 2024 கலை, வர்த்தகம்
புதிய பிரிவு ஆரம்பம் நாளை 02.07.2022 | 8.00 மணி
(12024) நிர்வாகம் - 077 011 9434

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4121)
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

உடனடி வேலை வாய்ப்புக்கள்
EXECUTIVE OFFICER
✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-4121)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

எரிபொருள் நெருக்கடி

## வவுனியா தாதியர் கல்லூரி தற்காலிகமாக மூடப்பட்டது

(வவுனியா)

நாட்டில் ஏற்பட்டுள்ள எரி பொருள் நெருக்கடி காரண மாக வவுனியா தாதியர் கல் லூரியை தற்காலிகமாக மூடு வதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது.

இதற்கமைய குறித்த கல்லூரி இன்று முதல் மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரண மாக ஆசிரியர்கள் பணிக்கு வரமுடி யாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று விடுதிகளில் தங்கி யுள்ள மாணவர்கள் எரிவாயு பற்றாக் குறை காரணமாக சமையல் செய்ய முடியாமல் தவிக்கின்றனர்.

அத்துடன், பகல் வேளையில் மின் சாரம் தடைப்படுவதால் மருத்துவ நட வடிக்கைகள் மற்றும் கற்பித்தல் நடை முறை என்பனவும் பாதிக்கப்பட்டுள்ள தாக கல்லூரி நிர்வாகம் சுட்டிக்காட்டி யுள்ளது. (ம-7)

அன்பு திருமண சேவை
பதிவு இல - FIN/BR/1139
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1987 இல் பிறந்த 11 இல் சூரியன், செவ்வாய் உள்ள சித்திரை நட்சத்திரம், கிரக பாவம் 24 உடைய வங்கி பிரதி முகாமையாளருக்கு (Deputy Manager) மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு (12034)
077 844 8942

## கட்டார் நிறுவனத்தின் தடை நீக்கப்பட்டது

(டோகா)

கட்டாரைச் சேர்ந்த தொண்டு நிறு வனமொன்றின் மீதான தடையை இலங்கை அரசாங்கம் நீக்கியுள்ளது என அமைச்சர் காஞ்சன விஜேசேகர கட்டாரில் தெரிவித்துள்ளார்.

கட்டாரைச் சேர்ந்த தொண்டு நிறு வனத்தின் அதிகாரிகளை சந்தித் தேன், 2019இல் விதிக்கப்பட்ட தடையை நீக்குவதாக பாதுகாப்பு அமைச்சு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதை தெரிவித்தேன் என அமைச்சர் டுவிட்டர் பதிவில் தெரிவித் துள்ளார்.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா விவகாரத்தின் போது அரசாங்கம் கட்டார் தொண்டு நிறுவனம் பயங்கர வாத நடவடிக்கைகளிற்கு நிதி வழங் கும் அமைப்பு என தெரிவித்திருந்த துடன் பயங்கர வாதத் திற்கு அந்த அமைப்பு உதவியது என்ற அடிப்படையில் விசாரணைகள் இடம்பெறுவ தாக தெரிவித்தி ருந்தது. (ம-7)

BMO Partnership ன் கீழ் Comdu.it உடன் இணைந்து CCIY ஒழுங்கமைக்கும்
இணையவழி கருத்தரங்கு
விசேட பேச்சாளர்கள்

திரு. சுதன் கேதீஸ்
ஜேர்மனி-Comdu.it
ஆடி 2 காலை 10 மணி
விடயம் :
நிலைபேறான அபிவிருத்தி ஒத்துழைப்பில் புலம்பெயர்ந்தோரின் ஈடுபாடு

திரு. பிறிடன்ஸ் பேர்டினன்ஸ்
ஜேர்மனி-Comdu.it
ZOOM : Meeting ID: 821 4900 9634 Passcode: 426729
(C-4561)
Supported by the Federal Ministry for Economic Cooperation and Development | Coordinated by sequa | Implemented by | Local Project Partner CCIY | cooperation partner AHK | BMO Partnership
No: 55, Kachcheri Nallur Road, Jaffna. | +94 21 222 6608 | 9 / +9470364 3600 - 4
e-mail: info@cciy.lk | web: www.cciy.lk

வேலையாட்கள் தேவை
பழ யூஸ் கடைக்கு ஆட்கள் தேவை.
Room Available
072 361 9751
(12032) யாழ்ப்பாணம்

வேலை வாய்ப்பு
VILLAGE HOTEL
வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள பிரபல்யமான உல்லாச விடுதியில் பணிபுரிய முன் அனுபவமுள்ள மற்றும் ஆர்வமுள்ள பணியாளர்கள் தேவை.
(12015)
மேலதிக தொடர்புகளுக்கு : +94 770 777 775
Email : jimmy@villagehotel.lk
Web : www.villagehotel.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.